விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 22 ஜ்முஹரம் 12 இதழ் 192

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-9-1987

## நிர்வாக அமைப்பில் புலிகள் பங்குகொள்ளுமா?

[யாழ்ப்பாணம்]

'இந்திய-இலங்கைஅரசுகளின் சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் அமைக்கப்படவுள்ள நிர்வாக அமைப்பில் பங்குகொளவதா? இல்லையா என்பதுகுறித்து இன்னும் சில தினங்களில் ஒரு முடிவுக்கு வருவோம்' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு எல். திலகர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப புலிகள் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மா நாட்டின் போதே திரு திலகர் இத்தகவலைத் தெரிவித்தார்

தமிழீழத்தில் அமைக்கப்பட

(8ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றச்சம்பவம்: 1000 பேர் விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை ஆயிரம் பேர்வரையில் கடுமையான விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணைக்குட்படுத்தப்பட்

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்ட உடனடி நிவாரணம்: ரூபா 96 லட்சம் கையளிப்பு

(கா. யோகநாதன்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் சேதமடைந்த பாடசாலைகள், வீடுகள், மதகுகளை உடனடியாக திருத்தி அமைப்பதற்காக நேற்று யாழ். அரசாங்க செயலகத்தில் உலக வங்கிக் குழுவினர் கலந்துகொண்ட மகாநாட்டில் 96 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. உடனடி நிவாரணப் பணமான 96 லட்ச ரூபாவும் தேற்றுக் காலை யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது**

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடந்த மாநாட்டில் திரு. அக்ரவல் தலைமையிலான எட்டுப் பேர்கொண்ட உலக வங்கிக் குழுவினர், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஒஸ்டின் பெர்ணன்டோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில், சேதமடைந்த பாடசாலைகளில் நிரந்தரமாக ஒரு பகுதியை அமைக்க 20 லட்சம் ரூபாவும், உடனடியாக 2000 தற்காலிக கொட்டில் வீடுகளை அமைக்க 60 லட்சம் ரூபாவும், வடமராட்சியில் சேதமடைந்த 7 மதவுகளைத் திருத்த 13,7500 ரூபாவும், தற்காலிக பாடசாலைக் கட்டிடம் அமைக்க 3,2500 ரூபாவும் வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டு நிர்மாணவேலை: 60 கோடி டாலர் தேவை

(பம்பாய்)

யாழ் குடாநாட்டின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப்பணிகளுக்காக சுமார் 60 கோடி டொலர் செலவாகுமென்று நிதி அமைச்சர் திரு ரெனிடிமெல் தெரிவித்துள்ளார்

இந்திய-இலங்கை கூட்டுப் பொருளாதார ஒத்துழைப்புக் குறித்து இந்திய நிதியமைச்சர் திரு. என். டி. திவாரி தலைமையிலான குழுவுடன் பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு புதுடில்லி செல்லமுன் திரு. ரெனிடிமெல் பம்பாயில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்

புதுடில்லிசெல்லும் அமைச்சர் தலைமையிலான குழு இருதரப்புபொருளாதார ஒத்துழைப்பு குறித்து பேச்சுக்கள் நடத்தமுன் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)



லீலா பேக்ஹவுஸ்

சண்டிலிப்பாய்க்கிளை

திறப்புவிழா

7-9-87 (இன்று) திங்கள் நண்பகல் 12 மணி முதல் 12-30 மணிவரையுள்ள சுபவேளையில் மேற்படி கிளை ஸ்தாபனத்தை திருவருள் துணை கொண்டு ஆரம்பித்து நடாத்தவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் இவ் விழாவுக்கு அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

லீலாபேக்ஹவுஸ்

தரமான பாண் பிஸ்கட் உற்பத்தியாளர்

மார்க்கட் சதுக்கம், சங்கானை.

[சி-2177]

## புலிகளுக்கு வாக்களிக்கத் தயார் என்கிறார் பிக்கு

[கொழும்பு]

'தமிழீழப் விடுதலைப்புலிகள்' இயக்கத்தினர் எமது உரிமைகளைப் பாதுகாத்தால் நாம் அவர்களுக்கு வாக்களித்தும் ஆதரவுகொடுப்போம்'' என்று பௌத்த பிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் தமிழீழ விடுத

(5ம் பக்கம் பார்க்க)

## "ஒப்பந்தத்தை குலைக்கமுயலும் வெளிநாட்டுச்சக்திகள் முறியடிக்கப்படும்" ரொமேஷ் பண்டாரி கூறுகிறார்

(சென்னை)

''இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தைச் சீர்குலைக்க முயலும் வெளிநாட்டு சக்திகளை முறியடிக்க இலங்கைக்கு இந்தியா உதவும் என்று அகில இந்திய காங்கிரஸ் [ஐ] கட்சியின் வெளியுறவு கமிட்டி பிரிவுத் தலைவர் திரு. ரொமேஸ்பண்டாரி கூறியுள்ளார்.

நேற்று ஜெய்ப்பூரில் நடை

(8ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் அஷ்ரப் கண்டனம்

[அலுவலக நிருபர்]

''அம்பாறை மாவட்டத்தில், 46 வீதமாக இருந்த முஸ்லிம்கள் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தினுல் 41 வீதமாகக் குறைந்து தற்போது 33 வீதமாகியுள்ளனர். கிழக்கில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை பலமாக எதிர்க்கிறோம்''.

வடபகுதி சேதங்களை பார்வையிட வந்த ஸ்ரீலங்கா சர்வதேச வை எம் எம். ஏ குழுத்தலைவர் அல்ஹாஜ் அஷ்ரப் ஹுசன் இவ்வாறு தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## வவனியா புலிகள் மரணம் கொலை எனத்தீர்ப்பு!

[வவனியா நிருபர்]

வவனியாவில்வைத்துகடந்த வெள்ளிக்கிழமை இரவு சுடப்பட்டு மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்

8-ம் பக்கம் பார்க்க)

# இந்திய படைமுகாம் முன் இன்று மறியல்!

(ஆ. இராஜலிங்கம்)

**தமிழர் பிரதேசத்தில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படையினரின் சகல முகாம்கள் முன்பாகவும் மறியல்போராட்டம் இன்று நடத்தப்படவுள்ளது**

இந்த மறியல் போராட்டம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமாலை பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டது.

சிறையில் வைக்கப்பட்டிருக்கும் சகல தமிழ் கைதிகளையும் விடுதலை செய்தல், தமிழர் பிரதேசத்தில் நடத்தப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களை

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Hy - Line வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 9ந் திகதி புதன்கிழமை குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி கொக்குவில் (சி 0880

வெளிவந்துவிட்டது G C E A/L விலங்கியல் ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும், கரப்பான், தேரை, மனிதன், பகுதி I ஆசிரியர் எஸ். செல்வநாயகம், பகுதி II விரைவில் வெளிவரவிருக்கிறது பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும் விலை ரூ. 35/- (சி 0902)

குஞ்சு விநியோகம் 8, 9, 10, திகதிகளில் Hiline, Bairaha Cristambo புரேயிலர் 12 00, பேடு 13 00 [வெள்ளை, சிகப்பு, கருப்பு] சேவல் வெள்ளை 3.00, சிகப்பு 4 00, கருப்பு 5 00. விநோத் போட்டோ, 45, புங்கங்குளம்றோட், யாழ்ப்பாணம், பிரியா ஏஜென்சி, 21, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி. (சி-0922)

நல்ல நிலையிலுள்ள ஒட்லி சிலிண்டர் உடன் விற்பனைக்குண்டு. சிங்கிள்டெமி காப் [f] தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 65/2 அரசடி வீதி, யாழ்ப்பாணம். [சி 0928]

திருமண அழைப்பிதழ்கள், திருமண, பிறந்தநாள் வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள "அரஸ் ஜவுளியகம்", 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24001. [சி-0129)

சுண்டுக்குளியில் நல்ல சுற்றுடலில் நவீன மாடி வீடு 3 அறைகளுடனும், மற்றும் வசதிகளுடனும் விற்பனைக்குண்டு (பரியோவான், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளதோடு, கிணறு, திண்ணவேலி தண்ணீர், ஆகியவையும் உண்டு) தொடர்பு:- 154, பழைய பூங்கா வீதி சுண்டுக்குளி காலை 8 மணிக்கும்– மாலை 2 மணிக்கும் இடையில் சந்திக்கவும். (சி 0881)

## விற்பனைக்கு

பாடசாலை சிறுவர்க்குகந்த ஹில்டன் 18'' சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. சா. பாலேந்திரன், "அன்னை இல்லம்", ஞானபாஸ்கரோதய சங்க வீதி, [பழைய டச்சுறோட்] கல்வியங்காடு. (சி-0935)

புன்னாலைக்கட்டுவன் பலாலி வீதியில் 16 பரப்பு, 12 பரப்பு காணியும், ஊரெழு பலாலி வீதியில் 4 பரப்பு, 18 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தரகரும் தொடர்பு கொள்ளலாம். விளம்பர எண்: A 2196 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [எ 2196]

நாரந்தனை தெற்கிலுள்ள மா. சிவயோகம் என்பவரினது 8½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. கிணறு, மலசலகூட வசதிகள் உண்டு. தொடர்பு கொள்ளவும் மா. சற்குணன், சங்குவேலி, மானிப்பாய். [சி- 0949]

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட வர்ண வளர்ப்பு மீன்கள், மீன் உணவு வகைகள், மீன் தொட்டிகள், அலங்காரப் பொருள்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு. ஸ்கிப் அ [க்] கியூறிம்ஸ், 37/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். [சி-0932]

புதிய, பழைய திரைப்பட இசைத்தட்டுக்கள் புத்தம் புதியவை விற்பனைக்குண்டு. த ஸ்ரீரங்கன், மே/பா நா. தம்பிராசா J. P., 'சத்தியபதி', ஆயர்பாடி ஒழுங்கை, மடத்தடி, தெல்லிப்பளை. (சி- 0944)

நல்லஇன வளர்ப்பு மீன்கள், கண்ணாடித் தொட்டிகள், மீன் தொட்டி அலங்காரப் பொருள்கள், மீன் உணவுகள் நியாயமான விலையில். வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. Northern Angel Aquarium, இராஜ வீதி, அச்சுவேலி. [சி-0801]

நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பிலுள்ள Morris Minor கார் உடன் விற்பனைக்குண்டு தொடர்: புதிய இல. 608, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி- 0956]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரபவ வருடம் ஆவணி 24ம் நாள் 9-9-1987 புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 10-30 மணி வரையுள்ள சுபவேளையில்,

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**எ. நற்குணராசா**
(யாழ் ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருநிறை செல்வி
**சு. சாந்தகுமாரி**
அவர்களுக்கும்

சுட்டிபுரம் அம்மன் ஆலயத்தில் திருமண வைபவம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

பொ எங்கரசு
குடும்பத்தினர்
மாலு சந்தி,
அல்வாய்.

செ. சுப்பிரமணியம்
குடும்பத்தினர்
பிரதான வீதி,
வரணி.
(சி-0926)

## தேவை

கணக்கு லிகிதராகக் கடமையாற்ற ஆங்கில அறிவுள்ளவர் தேவை. பாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் 8- 9- 87 திங்கள் மாலை 5 மணிச்கும், 6 மணிக்கும் இடையில் தங்கள் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர். யாழ். சைனீஸ் றெஸ்ரோரன்ற் 168, கோவில்வீதி, யாழ்ப்பாணம். [தற்போது இயங்கும் இடம்.) [சி-0953]

வைத்தியசாலையில் உதவியாளராகக் கடமையாற்றுவதற்கு ஒரு பெண் தேவை 20- 9- 87 க்கு முன் விண்ணப்பிக்கவும் வி. எண்: 0942, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி- 0942]

### WANTED

Retired Engineer with 30 years experience in Building Works etc seek employment Apply Advt No: C-0930, C/o Eelanadu, Jaffna [C- 0930]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனம் இன்றி இறந்தவர் வளக்கம்பரை சுழிபுரம் அம்பலவாணபிள்ளை வயித்திலிங்கம் தங்கக்கணபதியின் மரணச் சொத்துக்கள் விடையமாக
— இறந்தவர்

மரணசாதன நியாயாதிக்கம் 313

தங்கக்கணபதி கைம்பெண் மகேஸ்வரி வழக்பரை தொல்புரம், சுழிபுரம்.
— மனுதார்

1. தங்கக்கணபதி மேகநாதன்

பராயமற்றவர்கள்:

2. தங்கக்கணபதி செந்தமிழ்செல்வன்
,, 3 தங்ககணபதி ரூபன்
,, 4. தங்கக்கணபதி மகள் வாசுகி
,, 5. தங்கக்கணபதி மகள் வாணிஸ்ரீ
எல்லோரும் தொல்புரம் சுழிபுரம்
6. வயித்திலிங்கம் மகாதேவன்
சுழிபுரம், கிழக்கு சுழிபுரம் பராயமற்ற 2-5 எதிர்மனுதார்களின் வழக்குப் பாதுகாவலர்
— எதிர் மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் இதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1987-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் திகதி இன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்ற ஆணைப்படி,

வி. இராமச்சந்திரஐயர்,
பதிவாளருக்காக.

வரைவு
ம.கே. சுப்பிரமணியம்,
மனுதாரின் சட்டத்தரணி
சி-0861

## தேவை

நல்ல அனுபவம் வாய்ந்த ரெயிலர் தேவை. உடன் நேரில் வரவும். ராதா ரெயிலறிங். 23, பிரதான வீதி, அச்சுவேலி. [சி 0891]

வயது 18க்கும் 25க்கும்இடையிலுள்ள பயிலுநர் சகல அத்தாட்சிப் பத்திரங்கள், சான்றிதழ்களுடன் 9-9-87 காலை 9 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். எல்பிகெம் வாளித் தொழிற்சாலை, மாவிட்டபுரம். (சி-0921)

கல்வியன்காட்டில் அமைந்திருக்கும் ஒரு சிறிய கோழிப் பண்ணையில் வேலைசெய்வதற்கும், வீட்டுவேலைகளில் உதவி புரிவதற்கும், சாப்பாட்டுடன் தங்கி வேலைசெய்வதற்கு ஒரு சிறுமி அல்லது இளம் பெண் தேவை. முன் அனுபவம் அவசியமில்லை. அநாதைகளுக்கு முதல் இடம் அளிக்கப்படும் எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0924 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 0924)

பிடவை வியாபாரத்தில் அனுபவமும் திறமையுமுள்ள ஆண் விற்பனையாளர் தேவை. திறமைக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். "லிலியா". இல: 2, நவீனசந்தை, மேல் மாடி, திருநெல்வேலி. (சி-0907)


## வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள கனகசபை தர்மகுலசிங்கம், கருங்காலி, காரைநகர். 190/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி–0723

## சேவை

காலை முதல் மாலைவரை தங்களுடைய சகல பத்திரங்களையும் உடனுக்குடன் போட்டோஸ்ரற் செய்துகொள்ள நாடுங்கள். மக்மிலன் புத்தகசாலை, No-3 பஸ் நிலையம், ஆஸ்பத்துரி வீதி, யாழ்ப்பாணம். சி–0752

## 4–வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வி. ம. கண்ணையா**
(உரிமையாளர்: யாழ். மகோ ஸ்ரோர்ஸ்)

மலர்வு: 12-12-1907
உதிர்வு: 23-8-1983
திதி; 7-9-87

அன்பின் உறைவிடமே, பண்பின் சிகரமே, பாசத்தின் சுடரே, எம் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மைப் பிரிந்து நாலு ஆண்டு ஆனாலும் உங்கள் நினைவு எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி மக்கள் மருமக்கள். பேரப்பிள்ளைகள்.
44/4, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(சி 0906)

## சேவை

இந்தியாவிலிருந்து வெளிவரும் தலைசிறந்த பத்திரிகைகளான குமுதம், ஆனந்தவிகடன், யூனியர்விகடன், கல்கி ராணி, ஜெமினிசினிமா, இதயம் பேசுகிறது, சாவி, துக்ளக், மங்கை, சுமங்கலி, கல்கண்டு, அம்புலிமாமா, மங்கையர் மலர், ஞானபூமி, மாலைமதி, Sportstar, FrontLine, கலைமகள், கோகுலம், குங்குமம் ஏனைய நாவல்கள், சஞ்சிகைகளுக்கான ஓடர்கள் மீண்டும் எங்களால் பதிவுசெய்யப்படுகின்றன. ஏனைய விபரங்கட்கு நேரில் தொடர்புகொள்க: மக்மிலன் புத்தகசாலை, No 3, பஸ்நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-0812]

## மணப்பந்தல்

சைவ உயர் வேளாளகுல சைவ போசனம் உண்ணும் 30 வயதுடைய B. A. பட்டதாரி ஆசிரியைக்கு சைவ போசனம் உண்ணும் அதே இனத்தைச் சேர்ந்த எஞ்சினியர், டாக்டர் அல்லது அரச உயர்பதவி வகிக்கும் மணமகன் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ஐங்கரன் ஸ்ரோர்ஸ், இணுவில் மேற்கு, இணுவில். [சி 0829]

## தவறிவிட்டது

பண்ணைக்கும் லைடன் தொழிற்சாலைக்குமிடையில் ந. தர்மபாலன், புங்குடுதீவு-8 என்று விலாச மிடப்பட்ட அலுவலக பாக் (Office Bag) தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 53, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-0897)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற மரணசாதனமின்றி இறந்த தொல்புரம் கதிரேசர் அப்புத்துரை பெண் பொன்மலரின் சொத்துக்கள் விடயமாக
—இறந்தவர்

இல. T 312

கதிரேசர் அப்புத்துரை
தொல்புரம், சுழிபுரம்.
—மனுதார்

எதிர்

அப்புத்துரை மகள் தவமலர்,
தொல்புரம், சுழிபுரம்.
எதிர் மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்து எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் இதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இதில் அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி

வி. இராமச்சந்திரஐயர்
பதிவாளருக்காக.

வரைவு:
எம். கே. சுப்பிரமணியம்
மனுதாரின் தரணி.
(சி 0860)

# லெபனானிலுள்ள பலஸ்தீனிய அகதிகள் முகாம்கள் மீது இஸ்ரேல் விமானத்தாக்குதல்!

## 30 பேர் உடல்சிதறிப் பலி

பெய்ரூட், செப் 6

**லெபனானில் சைற்ரன் துறைமுகமருகில் பலஸ்தீனிய அகதிகள் முகாம்கள் மீது இஸ்ரேல் விமானப் படை யுத்த விமானங்கள் மேற்கொண்ட பலத்த தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் உடல் சிதறிப் பலியானதாகவும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று அதிகாலை திடீரென லெபனான் வான் பிரதேசத்துள் புகுந்த 5 இஸ்ரேலிய யுத்தவிமானங்கள் பலஸ்தீனிய அகதிகள் முகாம்களிருக்கும் பகுதிகள் மீது சுமார் 20 நிமிடங்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டன.

அகதி முகாம்களில் மக்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த தருல் விமானத் தாக்குதலுக்கிலக்காகி பெண்கள் குழந்தைகள் உட்பட முப்பதிற்கும் மேற்பட்டோர் உடல் சிதறிய நிலையில் பலியானார்கள், நூற்றுக்கும் மேற்பட்டவாகள் பலத்தகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் தமது உடலவயங்களை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சைற்ரன் துறைமுகத்தருகில் உள்ள பல அகதிகள் முகாம்களில் சுமார் மூவாயிரம் பலஸ்தீனிய அகதிகள் தங்கியுள்ளனர் நேற்றைய தாக்குதலில் ஆறிற்கும் மேற்பட்ட முகாம்கள் தாக்குதலிற்குள்ளாயின.

கடந்த எட்டு மாதங்களில் லெபனானில் பலஸ்தீனிய அகதிகள் முகாம்கள் மீது இஸ்ரேல் இருபதிற்கும் மேற்பட்ட தடவைகள் தாக்குதலை நடாத்தியுள்ளது. (சி)

---

## ஆப்கான் பிரச்னையில் அமெரிக்க பாணியில் பாகிஸ்தான் தொடர்கிறது

### அஸ்கர்கான் குற்றச்சாட்டு

கராச்சி, செப். 6

ஆப்கானிஸ்தானில் போரை நீடிப்பதற்காக அமெரிக்க ஆணைகளை பின்பற்றுவதன் மூலம் பாகிஸ்தான் தனது நலன்களுக்கும் ஆப்கானிஸ்தானின நலன்களுக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டுவருவதாக பாகிஸ்தான் எதிர்க்கட்சி தலைவரில் ஒருவரான எயர்மாஷல் அஸ்கர்கான் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமபாத்தில் செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் பாகிஸ்தானின் இந்நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; ஆப்கான் பிரச்னைக்கு தீர்வொன்றைக் காண்பதில்

(5ம் பக்கம் பார்க்க)

---

## கிராமசேவையாளர் பிரிவு உதயம்

[உடுவில்]

சங்குவேலிகிராமத்துக்கென புதிய கிராமசேவையாளர் பிரிவு உதயமாகின்றதனை முன்னிட்டு இன்று 7-ம் திகதி சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலையில் திரு சிவ. ஸ்ரீஸ்கந்தநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

வலி-தெற்கு உதவி அரசஅதிபர் திரு ஆ. மகாலிங்கம், உடுவில் கிராம சேவையாளர் திரு சி. ஆறுமுகம் உட்படப் பலர் உரையாற்றுவர்:

---

## உலகக் கிண்ண கிரிக்கெட்

### பவுண்றிக்கு 500 சிக்ஸருக்கு 1000

(புதுடில்லி)

இந்தியா-பாகிஸ்தானில் அக்டோபர் மாதம் ஆரம்பமாகும் 'ரிலையன்ஸ்' உலகக் கிண்ணக் கிரிக்கெட்போட்டியில் கலந்து கொள்ளும் இந்திய அணியில் போட்டிகளில் தனிப்பட்ட திறமைகளைக் காட்டும் வீரர்களுக்கு பல பணப் பரிசுகளை வழங்க இந்தியாவிலுள்ள எலக்ரோனிக் கம்பனியான 'புஷ் இந்தியா லிமிட்டெட்' முன்வந்துள்ளது.

இதன்படி துடுப்பாட்டத்தில் ஒவ்வொரு பவுண்றிக்கும் 500 ரூபாவும், சிக்ஸருக்கு 1000 ரூபாவும், பந்து வீச்சில் ஒவ்வொரு மெய்டின் ஓவருக்கும் 500 - ரூபாவும் கைப்பற்றும் விக்கெட்டுக்கு 1000 ரூபாவும் பந்து தடுப்பில் ஒவ்வொரு பிடிக்கும் 500 ரூபாவும் ஸ்ரம்பிற்கு 1000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது

மற்றும் 50 ஓட்டங்களைப் பெறுபவர்களுக்கும் செஞ்சரி பெறுபவர்களுக்கும் விஷேட பரிசுகளும் வழங்கப்படும்.

### 4000 பொலிஸார் விஷேட பாதுகாப்பு

கல்கத்தாவில் நவம்பர் 8-ம் திகதி நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் பார்வையாளர்களின் நன்மை கருதிச் சுமார் 4000 விஷேட சேவைப் பொலிஸார் கடமையிலீடுபடுத்தப்படவுள்ளனர்.

இதற்கமைய ஏடன் பார்க்ஸ்ரேடியத்தைச் சுற்றிப் பாரிய இரும்பு வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 95,000 பார்வையாளர்கள் இறுதிப் போட்டியில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது

இந்தியாவில் முதன் முதலாக 70 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட எலக்ரோனிக் ஸ்கோர் போர்ட்டும் இம்மைதானத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### நடுவர்களின் தெரிவு

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து நாடுகளிலுமிருந்து 10நடுவர்கள்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவான நடுவர்கள் விபரம்: வி கே. ராமசாமி, ராம் பாபு குப்தா [இந்தியா], டிக்கி பேர்ட், டி. கே. செப்பேர்ட் [இங்கிலாந்து], மகபூப் ஷா, கே. ஹயாத் [பாகிஸ்தான்], டேவிட் அர்ச்சார் [மே. இந்தியா], டேவிட் உட் வார்ட் [நியூஸிலாந்து], ரோனி கிராப்டர் [ஆஸ்திரேலியா], விதான கமகே [இலங்கை].

இந்தியாவிலும்-பாகிஸ்தானிலுமாக மொத்தம் 27 போட்டிகள் நடைபெறும்.

### அனுபவமற்ற கிரிக்கெட் வீரர்கள்

இம்முறை போட்டியில் கலந்துகொள்ளும் நியூஸிலாந்து, இங்கிலாந்து, மே. இந்திய அணிகளில் பிரபல முன்னணி வீரர்கள் பலர் கலந்துகொள்ளவில்லை. அவர்களின் இடங்களை அனுபவமற்ற ஆட்டக்காரர்களே நிறைவு செய்கின்றனர்.

நியூஸிலாந்து அணியில் ரிச்சர்ட் ஹட்லி [வயது 33] யின் இடத்திற்கு வில்லி வாற்சன் [வயது 21] தெரிவாகியுள்ளார் இங்கிலாந்து அணியில் இயன் பொதம் பில் எட்ஸ்மன், டேவிட் கவர், போட்டியில் கலந்துகொள்ளவில்லை பொதத்தின் இடத்திற்கு டேவிட் பிரிங்கிள் ஆடுவார். மே. இந்திய அணியில் கோல்டன் கிறினிச், மல்கம் மாஷல் கலந்துகொள்ளமாட்டார்கள். கிறினிச்சின் இடத்தில் பிலிப் சைமன் [வயது 24] ஆடுவார். (சி)

---

உலகச் செய்திகள்

## ஆப்கான் கெரிலாக்களால் சோவியத் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது!

### எட்டுப்பேர் மாண்டனர்!

மாஸ்கோ, செப். 6

ஆப்கானிஸ்தான் எல்லைப்புற நகரொன்றில் எட்டு பயணிகளுடன் தரையிறங்க முயன்ற சோவியத் விமானமொன்றை ஆப்கான் கெரிலாக்கள் சுட்டு வீழ்த்தியதில் அதிலிருந்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாஸ்கோவிலிருந்து சென்ற இவ்விமானம் ஆப்கானில் இருக்கும் சோவியத் படை வீரர்களுக்குத் தேவையான பல பொருள்களை ஏற்றிக்கொண்டு எட்டு பயணிகளுடன் ஆப்கானின் எல்லைப்புறமான கோஸ்ற் பிராந்தியத்திலுள்ள விமான நிலையமொன்றில் தரையிறங்க முற்பட்டபோதே கெரில்லாக்களினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஆப்கானில் சோவியத் ஆதரவு கம்யூனிஸ்ட் அரசுக்கெதிராக அமெரிக்க ஆதரவுடன் போராடிவரும் கெரில்லாக்கள் கடந்த 7 வருடங்களில் 50க்கும் மேற்பட்ட விமானங்களையும், ஹெலிகாப்டர்களையும் சுட்டு வீழ்த்தியுள்ளனர். (சி)

---

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட
லிஸ்ரர் டீசல் என்ஜின்களுக்கும்,
ஜெனரேட்டர்களுக்கும் மற்றும்
ஹரிலிஸ்ற் நீரிறைக்கும் இயந்திரங்களுக்கும்
(இங்கிலாந்து வில்லியேர்ஸ் என்ஜினுடனும்
ENFIELD INDIA MK 12 என்ஜினுடனும்
இணைக்கப்பட்டது)
ஆகியவற்றிற்கு தொடர்புகொள்க;-
எமது வடமாநில விநியோகஸ்தர்கள்:-
டைனமிக் என்ஜினியரிங் லிமிட்,
476, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22115.
அகில இலங்கை ஏகமுகவர்கள், உற்பத்தியாளர்கள்:
ஹரிசன்ஸ் என்ஜினியரிங்
(கொழும்பு) லிமிட்டெட்,
330, ரி பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி:- 596871—6, 598682
[சி-0868]

---

## திருப்பணி வேலை பூர்த்தி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற அருள்மிகு அம்பாள் ஆலய திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இன்று 7-ம் திகதி அம்பாளுக்குக் கும்பாபிஷேகமும், விசேட பூசைகளும் இடம்பெறுகின்றன. இதனையொட்டி பகல் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சமயச்சொற்பொழிவும் இடம் பெறும். பக்த அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

---

மங்களகரமான
திறப்பு விழா
சூப்பர் சவுண்ட்
றெக்கோடிங் சென்ரர்
SUPER SOUND RECORDING CENTRE
இல: 107, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
(பழைய பொலிஸ் நிலையம் அருகில்)
காலம்: 07-09-1987 திங்கட்கிழமை
நேரம்: நண்பகல் 12-30 மணி.
★ சகலவிதமான பழைய, புதிய தமிழ் திரைப்பட பாடல்களும், ஆங்கில ஹிந்திப் பாடல்களும் சிறந்த ஸ்ரீறியோ முறையில் தரமாக ஒலிப்பதிவு செய்து கொள்ளலாம்.
ஆதரவாளர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கே. சுகுமாரன்.
கந்தரோடை, சுன்னாகம்.
(சி-0910)

### மணிவாக்கு

உண்டு உடுத்துப் பூண்டு இங்கு
உலகத்தார் போல்திரியும்
தொண்டர் விளையாட்டே
சுகங்காண் பராபரமே.

— தாயுமானவர்.

## நமதுநோக்கு

# கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் கதி

கிழக்கிலங்கைபல்கலைக் கழகத்தின்தோற்றம்,இன்று தம்பதவியை ராஜிநாமாச் செய்திருக்கும் அதன் உபவேந்தர் பேராசிரியர் கே. டி. அருட்பிரகாசத்தின் பேராற்றலின் சின்னமெனலாம்.

மட்டக்களப்பு பல்கலைக் கழகக்கல்லூரியென்றுஆரம்பிக்கப்பட்ட கிழக்கிலங்கையின் உயர்கல்வி நிலையம் சில ஆண்டுகளாக இயங்கியபோதும் ஈற்றில் சிதைந்தபோது, அதனை உயிர்ப்பிக்க வந்தவர் பேராசிரியர் அருட்பிரகாசம். கிழக்கிலங்கைக்கே அவரொரு பரப்பிரகாசமாவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அந்த எதிர்பார்ப்புக்கு குறுகியகால எல்லைக்குள் அவர் ஆற்றிய இமயம் போன்றசாதனைகள் காரணமாயிருந்தன.

நாட்டில் மிக நலிவுற்ற பகுதி கிழக்கிலங்கை கல்வியில் பின்தங்கிய நிலையே அதன் முக்கிய காரணம். அங்குள்ள சிரேட்டகல்லூரிகளைத் துரிதப்படுத்தி உயர் கல்விக்கு வளமளிக்க பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பமானது.

பலகாரணங்களால்,குறிப்பாக அரசியல் பாகுபாட்டால் கல்வியின் தரம் உயர்ச்சியடையவில்லை. பல்கலைக்கழகக்கல்லூரி பேராதனையுடன் இணைந்தபோதும், அந்த இணைப்பு யானையுண்ட விளாங்கனி போல பயனற்றுப்போய் விட்டது.

அதனுல் எழுந்த பல சர்ச்சைகளைச் சாதுரியமாகச் சமாளித்து, இருவருடங்களில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவிய பெருமை உபவேந்தர் அருட்பிரகாசத்துக்கே உரியது.

பலபோட்டிகளை, எதிர்ப்புக்களை, சிக்கல்களை முறியடித்து நான்கு முக்கிய துறைகளைக் கொண்ட கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் நிறுவியது நாட்டில் ஒருவித வியப்பை உண்டாக்கியது.

விஞ்ஞானம், வர்த்தக முகாமைத்துவம், விவசாயம், நுண்கலைப்பிரிவு என்ற நான்கு துறைகள் கிழக்கிலங்கையின் அபிவிருத்திக்கு நன்றுகப் பயன்படும் சாத்தியம் கொண்டிருந்தன.

திருகோணமலை தொடக்கம் பொத்துவில் வரைக்குமுள்ள பிரதேசத்தின் விவசாயம் வர்த்தகம் எழுச்சி பெறுவதற்கு உபவேந்தர் எடுத்த முயற்சி அதிகம் உதவும் என்று எண்ணப்பட்டது.

விவசாயம் பீடம்அமைப்பதற்கு உண்டானஎதிர்ப்பை சமாளிக்கும் வல்லமை வேறெவருக்கும் இல்லையென்றநிலை ஒரு காலம் எண்ணப்பட்டது.

இளைஞர் போராட்டம் உக்கிரம்பெற்ற இடம் மட்டக்களப்பு. மக்கள் உயிர் உடைமை அதிகம் இழந்த இடம் மட்டக்களப்பு. அரசபடையின் அட்டூழியங்களும் அவற்றுல் அதிகரித்த இனக்குரோதம் அங்கு தொடர்வதால் அது இன்னும் அமைதியற்ற பிரதேசமாகவே இருக்கின்றது.

இவை அனைத்தையும் ஒதுக்கி, காலகதியில் கிழக்கிலங்கை. தமிழ் மாநிலத்தின் தானியக் களஞ்சியம் மட்டுமல்ல, கல்விக் களஞ்சியமாகவும் திகழமுடியுமென்ற நம்பிக்கையிருந்தது.

தமிழ் இஸ்லாமிய மக்களும், அங்கு பூர்வீகச் சிங்களக் குடிகளும் இணைந்து வாழ்வதற்குரிய அரசியலமைப்பு அதனை உறுதிப்படுத்தும் திறந்த மனோபாவம், கல்வி ஒன்றுலே தான் வளர்ச்சியடைய முடியும்.

இதற்குப் பக்கபலமாயிருப்பதே பொருளாதார விருத்தி. விவசாயத்திலும் வர்த்தகத்திலும் நாட்டில் முன்னணி வகிக்கவல்ல கிழக்கிலங்கைகுறுகிய அரசியல்போட்டியால், அரசின் சூழ்ச்சியால் விளையும் இனக்குரோதத்திற்குப் பலியாகின்றது.

அதன் பல்கலைக்கழகம் ஒரு செத்துப் பிறந்த குழந்தையின் கதியென்று நாம் வாழாவிருக்கலாமா?

தெற்கிலங்கையில் மிகச் சாதாரணமாகும் பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு வேறு விதமானது. அதனைத் தீர்த்துவைக்க, குறைகளை நிறைவேற்ற அரசு அதிக ஆர்வம் காட்டும்.

கிழக்கிலங்கையின் கதை வேறு. அதன் கதாநாயகரே தம் பதவியை உதறிவிடுவதானுல், அதுவும் மாணவர் பகிஷ்காரமே காரணமென்றுல் நோயாளியும் நோய்க்கு வேண்டிய நிபுணரும் ஒன்றுபடாத பரிதாப நிலையைக்குறிக்கும்.

இந்தச் சிக்கலை எவ்வாறு அவிழ்க்கலாமென்பது அங்கு வாழும் மாணவர், இளைஞர், வளர்ந்தோர் குழுக்களின் அவசிய பொறுப்பு. இவர்களின் பிரதிநிதிகளை ஒன்றுபடுத்தி பேராசிரியரின் விசுவாசத்தை மீட்பதில் விடுதலைப் போராளிகளுக்குப் பிரதான பங்கு உண்டு.

சில்லறைச் சர்ச்சைகளை இந்த நெக்கட்டான காலத்தில் பெரிதுபடுத்துவது பயிரை முளையில் கிள்ளி விடுவது போலாகும் பேராற்றல் படைத்த நிர்வாகிகள் இன்று சந்தையில் கிடைக்கும் பொருள்கள் அல்ல.

கிழக்கின் வளர்ச்சி, வடக்கு-கிழக்கு ஒருமைப்பாடு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் முக்கியத்துவம் பெற்ற மாநில ஆட்சி, இனஒற்றுமை போன்ற பெரியவிடயங்கள் ப் பல்கலைக்கழகத்தின் பின்னணியில் பின்னிக்கிடக்கின்றன.

மாணவ சமுதாயம் இன்று விழிப்புடன் இருப்பது கண்கூடு. அவர்கள் பதவியை ராஜினுமாச்செய்த உபவேந்தருக்கு விடுத்த விண்ணப்பம் இதற்குச்சான்றுகும்.

விழிப்பு மட்டும் போதாது. பொறுப்புணர்வும் அதே அளவு அவசியம். மலை, நிலை கலங்காது. கலங்கின் தடுப்பது அரிது சான்றேரது சினத்தைப் பரீட்சிப்பது ஆபத்தானது. நாட்டின் பல்கலைக்கழக சமுதாயம் மாணவர் நலன் கருதி இந்த நெருக்கடிக்கு உதவுவது நல்லது.

# ராமசாம்ராஜ்யத்தை புவியில் அமைக்க முயன்ற புண்ணிய புருஷர்

(சுவாமிசிவானந்த ஜியின் நூற்றுண்டு விழா இன்றுமநாளையும் நடைபெறுகிறது)

சாந்தியும், செழுமையும் சந்தோஷமும் நிறைந்த ராமராஜ்யத்தைப் புவியிலே அமைக்க முயன்ற புண்ணிய புருஷர்களிலே தலைசிறந்தவர் இமயஜோதி ஸ்ரீ சுவாமி சிவானந்தாஜி மகராஜ் அவர்கள். அணுகுண்டும், ஆதிக்கவெறியும் அசைக்கமுடியாத ஆத்மசக்தியை வளர்க்க வழிகாட்டினுர் அவர். அகவிருள் போக்கி அருள் ஒளி காட்டும் அவரது பொன்மொழிகளை உலகெல்லாம் தலைவணங்கிக் கேட்கின்றது.

சுவாமி சிவானந்தர் ஒரு பெருந்தகையான ஆத்மீக புருஷனுக அவதரித்தார் அதிசயப்படத்தக்கதாக இருதயத்தில் அன்புப் பொக்கிஷமாக விளங்கினுர். அவரது வாழ்வு முழுவதும் தனது ஆனந்தத்தைப்பொருட்படுத்தாது. மற்வர்களின் ஆனந்தத்தையே வாழ்வின் இலட்சியமாக வைத்துத் தனது வாழ்வை நடத்தினுர். இதன்பெறுபேருக இவர் உலகமக்கள் யாவராலும் அபிமானிக்கத்தக்க இலட்சிய புருஷரானுர் இவர் சமயவேற்றுமை, இனவேற்றுமை, பால்வேற்றுமை தேசவேற்றுமை, கிழக்கு-மேற்கு வேற்றுமை என்பன இன்றிச் சகலரையும் தனது ஆன்மாவாகவே தரிசித்தார்,

"எந்தமனதில் ஆறுதலின்மை ஏற்படுகின்றதோ அங்கே ஆனந்தமோ, உபசாந்தமோ ஏற்படாது. தேகத்திலே எந்நேரமும் சாந்தமும், உபசாந்தமும் ஏற்படவேண்டுமாயின், எங்கள் பழக்கவழக்களை மாற்றவேண்டும். அதாவது "தேகம் எந்நேரமும் தொழிலாகவேகுலையும். அந்த நேரம் எல்லாம் தொழில் தேகத்துக்குரியது, நானே ஆன்மா எனக்கும் தொழிலுக்கும் அருகதையில்லை என்ற பழக்கவழக்கத்தை உண்டாக்க வேண்டும் ஷணநேரமும் தவறுது சூழல்நிலை மாறுதலுக்கேற்ப எம்மை அதனுடன் இணைக்காது எமது சொந்த நிலைப்பாட்டில் நிலைக்கவேண்டும். வாழ்வில் பிரபல்யப்படுத்தாமல், உண்மையில்உறைந்து நில் மிதமிஞ்சியஆசைகளுக்கு உன்னை அடிமைப்படுத்தி விடாதே. அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளைவிட வேறு எத்தேவைகளிலும் உன் சித்தம் செல்லாதிருக்கட்டும். இச்சைகளைப் பலதரப்படுத்தல் புத்திசாலித்தனமல்ல. பலதரப்பட்டஆசைகளை அவாவுதல், ஒருக்காலும் முடிவுபெருத பாலைவனத்தில் ஓடும் ஆறுகளுக்கு ஒப்பாகும். எரிகின்ற நெருப்பை விறகைப் போட்டுப்போட்டு அழிக்க முயலுவதுபோல் இச்சைகளை ஆசைப்பட்டுப்பட்டு அழிக்க முடியாது. பெருகும்ஆசையை விடவிட ஆனந்தம்பெருகும்."

மேற்கூறியவற்றை ஒவ்வொருவரும் அனுசந்தானம் செய்ய வேண்டுமென்பது சுவாமி அவர்களின் பேரவா. இந்த உண்மையை உணர்ந்து தானுகவே வாழ்ந்து கண்ட இலட்சியவாதி சுவாமி அவர்கள்.

எங்களின் நாளாந்த கர்மங்களை ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்வதற்கு வழிவகைகளைச் சொல்லி மக்களை வழிநடாத்தினுர்.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும், வித்தியாசமில்லாமல் மாரு ஆனந்தத்தைத் தேட வெளிக்கிட்டு, அழியா இன்பத்தை அழியும் உலகப் பொருள்களூடே தேடத் தொடங்கிவிட்டனர். இவர்களை சுவாமி அவர்கள் அன்பாகத் தம்மிடம் அழைத்துச் சொன்னதாவது; "காணுகின்ற ஒவ்வொரு பொருளிலும், நிலைமாரு உண்மையும், மாறுகின்ற பொய்மையும் ஒருங்கியிருகிக்ன்றன. ஆகையால் உண்மையை ஆளவிரும்பும் நாம், ஒவ்வொருபொருள்களிலுமுள்ள பொய்மை, மெய்மைகளை பெரியார்களது துணைகொண்டு மெய்யிலுறைத்து நிற்கப்பழகவேண்டும்.

**சி. கனகரத்தினம்**
(தலைவர் திவ்ய ஜீவனசங்கம், தலைவர் வடபிராந்தியபோக்குவரத்து சபை)

சுவாமி சிவானந்தாஜி மகராஜ் அவர்களின் நூற்றுண்டு ஜயந்தி விழாவை நாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றன உலகெங்கிலுமுள்ள திவ்ய ஜீவன சங்கங்கள் 07-09 86 தொடக்கம் 08-09-87 வரையுள்ள ஒரு வருடகாலத்தை சுவாமி அவர்களின் நூற்றுண்டு விழாவாகக் கொண்டாடுவதற்கு ஒவ்வொரு மாதமும் 8ந் திகதி சிறப்புச் சொற்பொழிவுகள், பூஜை பிரார்த்தனைகளை நடததி வந்தனர். யாழ். திவ்ய ஜீவன சங்கமும் மேற்படி விழவை இன்றும் நாளையும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றது

இன்று காலை பூஜை, பஜனை திருவிளக்குப் பூஜை, கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் மாலை செந்தமிழ் திலகம் புஷ்பா செல்வநாயகம். பேராசிரியர் செ சிவஞானசுந்தரம் (நந்தி) (பீடாதிபதி, யாழ் மருத்துவ பீடம் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தாவின் பக்திப் பாடல் நிகழ்ச்சியும் நடைபெறும்

நாளை காலை சுவாமி அவர்களின் உருவப்படம் மேளவாத்தியத்துடன் ஊர்வலமும், நல்லை ஆதீனம் மகாசந்நிதானம், சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் ஜயந்திவிழாக் கொடியேற்றுதலும் அகண்டநாம பஜனையும் நடைபெறும்

மாலை நல்லை ஆதீனம் மகா சந்நிதானம் தவத்திரு சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, ஆ செ நடராசா (தலைவர், திவ்ய ஜீவன சங்கம் கொழும்பு), வே ந. சிவராசா (பதிவாளர் யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும். பொன். சுந்தரலிங்கததின் இசைக் கச்சேரியும் நடைபெறும்.

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசா இதயம் படைத்தவர்களாயிருக்க வேண்டும். ஒருவரையும் உனக்கு வேருகப் பார்த்து இகழாது மற்றவர்களிலுள்ள நிறைவைப் பார்ப்பதேயில்லாது குறைவை ஆளாதே. தொண்டு செய்யும்போது தொண்டுக்குப் பொறுப்பானவரையோ, தொண்டையோ கருதாதும், அவரெனக்கிதை எப்போதாவது திருப்பிச் செய்யக்கூடும் என்ற கருத்தும் இல்லாமல் சுயநலமற்ற இறை தொண்டாகச் செய்யவேண்டும். இதையே தெய்வீக வாழ்வென அழைக்கின்றோம்.

# "நெருக்கடி நிலை கருதி ஆசிரியர்கள் முழுமையான சேவையை அளிக்கவேண்டும்"

## ஜனப் மன்சூர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"அண்மைக்கால வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தம் கல்வி வாய்ப்பை இழந்த மாணவசெல்வங்களின்நலனைக் கருத்நில் கொண்டு அதிபர்கள், ஆசிரியர்கள் யாவரும் தமது சேவையை கடந்த காலங்களைவிட முழுமையாக நல்க முன்வரவேண்டும்".

இவ்வாறு வடபிரதேச கல்விப் பணிப்பாளர் ஜனுப் என். எம. மன்சூர் தெரிவித்தார். அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கோப்பாய் கல்வி வட்டார மறுமலர்ச்சிக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. த தங்கராசா தலைமைல் நடைபெற்ற கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ஜனுப் மன்சூர் தெரிவித்ததாவது. "கடந்தகாலங்களில் ஒழுங்காகப் பாடசாலைகளை நடத்தமுடியவில்லை. அப்படியான பாடசாலைகள் இழந்த பாடசாலை நாட்களை ஈடு செய்யும் வகையில் விடுமுறை நாட்களில் வகுப்புக்களை நடத்தவேண்டும். அத்துடன் அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் கூட கல்வி கற்பிக்க முன்வருதல் வரவேற்கத்தக்கது. முன்னர் இருநேரப் பாடசாலையாக இயங்கிய பாடசாலைகள் மீண்டும்இயங்கவேண்டும்.

நீண்டகாலமாக இயங்க முடியாதுதிருந்த வசாவிளான் றேமன் கத்தோலிக்க பாடசாலை, வசாவிளான் வேலுப்பிள்ளை வித்தியாலயம் ஆகியவற்றை மீண்டும் இயங்க நடவடிக்கை எடுத்த வட்டார கல்வியதிகாரி பெரிதும் பாராட்டுக்குரியவராவர்

பிரதம கல்வி அதிகாரி திரு. கந்தசாமி உட்பட பல கல்விப் பகுதி உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# அடைக்கலநாயகி திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். அடைக்கலநாயகி ஆலயத் திருவிழா கடந்த 30-ம் திகதி ஆரம்பமாகியது. இம் மாதம் 8-ம் திகதிவரை திருவிழா நடைபெறும்.

இவ்விழா நிகழ்ச்சிகளாக இறைவாக்குவழிபாடு, திருப்பலி. ஆவியில் வாழ்வு உரைகள், செபமாலை, மறைஉரை என்பன தினமும் இடம் பெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை திருநாள் திருப்பலியில் ஆயர் அன்ரனி ஆண்டகையின் உறுதிப் பூசுதல் சடங்கும் இடம்பெற்று மாலை ஆராதனையில் திருச்சுரூப பவனியும், ஆசியும் நிகழும்.

# அமைச்சர்கள் எம்.பிக்களுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையில் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெள்நாட்டு பாதுகாப்புப்பிரிவுகள்மூலம் பாதுகாப்பளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற கொலை, கொலைமுயற்சி சம்பவங்களையும் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டுவரும் கொலைப் பயமுறுத்தல் எச்சரிக்கைகளையடுத்து இம்முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் ... பொலிஸார் பலத்த பாதுகாப்பு வழங்கிவருமன்றபோதிலும் மேற்படி திட்டத்திற்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

# வடக்கு,கிழக்கு பகுதிகளுக்கு 500 பொலிஸார்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து முதல் கட்டமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் கடமையாற்ற சுமார் 500 தமிழ் முஸ்லிம் பொலிஸார் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகசுற்றுநிரூபமொன்று சகலபொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டு அங்குகடமையாற்றும் தமிழ் முஸ்லிம் பொலிஸார் வடக்கு கிழக்கில் எப்பகுதிக்கு செல்ல விரும்புவதாகவும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடக்கு கிழக்கு பகுதிகளில் முன்பிருந்த பொலிஸ் நிலையங்களுடன் மேலும் சில பொலிஸ் நிலையங்களை திறக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [சி]

## ஒத்திவைப்பு

லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் இன்று இடம்பெறவிருந்த முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு வைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரியின் மாணவர் மன்றம் இந்த ஒத்திவைப்பை அறிவித்துள்ளது.

## வவனியாவில் 'புலி' ஆதரவாளர் தாக்கப்பட்டனர்

[வவனியா!

வவனியா மாவட்டத்தில் பரவலாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் பலர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார் என்பது தெரியவில்லை

பண்டாரிகுளத்தில் உள்ள புலிகளின் பிராந்திய காரியாலயம்கூட சேதப்படுத்தப்பட்டுள்ளது

## அம்பாறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டுப் பேரடங்கிய இக்குழுவினர், வடமராட்சியில் சேதமடைந்த இடங்களை பார்வையிட்டதுடன், விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. திலீபனையும் சந்தித்தனர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "அம்பாறையில் முஸ்லிம் மக்களும் தமிழர்களும் ஒன்றாக ஒற்றுமையாக இருந்தால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

"திகவாவிப' பௌத்தஆலயத்தை சுற்றியுள்ள அப் பிரதேசத்தில் பரப்பரையாக வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

"முஸ்லிம்மக்கள் கிழக்கில் பெரும் யானைக் காடுகளை வெட்டி களனியாக்கிய இடமெல்லாம் இன்று சிங்களவர்களுக்குச் சொந்தமாகியுள்ளது. இந்த நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது. தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தால் இந்த நிலைமையைமுறியடிக்கலாம்.

## சர்வோதய தலைவர் விரைவில் யாழ் விஜயம்

(வவனியா

சர்வோதய த்தலைவர் கலாநிதி ஏ ரி. ஆரியரத்ன உத்தியோகபூர்வ விஜய ஒன்றினை மேற்கொண்டு விரைவில் வட பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார் என சர்வோதய வட்டாரங்கள் கூறின.

புனர்வாழ்வு நடவடிக்கைகளை எப்படி மேற்கொள்வது என்ற விடயம் குறித்து ஆராயவே வடபகுதி விஜயம் அமையவுள்ளதாக தெரியவருகின்றது.

## மூதூர் சம்பவம்: திருமலையில் ரணதுங்க

[கொழும்பு]

திருமலை மாவட்டத்திலுள்ள இந்திய சமாதானப் படைத் தளபதியுடன் நேற்று இலங்கை முப்படைகளின் கூட்டுத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அண்மையில் மூதூர் பகுதியில் உதவி அரசாங்க அதிபர் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து எழுந்துள்ள பதற்ற நிலையையடுத்தே ஜெனரல் சிறில் ரணதுங்க விசேட விமானம் மூலம் திருமலை சென்றார். [சி]


## கடைசி நேர வரிவிளம்பரம்

### கல்வி

வகுப்புகள் க. பொ. உயர்தரம் பிரயோக கணிதம், தூயகணிதம், பௌதீகவியல் தகுதிவாய்ந்த பொறியியலாளரால் பயிற்றப்படும் City & Guilds[ 1988] வகுப்புகள் நடைபெறும். தொடர்பு 46 ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். சி-0959

### தேவை

சிங்கப்பூரில் பணிப்பெண்ணாக வேலைசெய்ய பெண்கள் இருவர் தேவை நேரில் பாஸ்போட்டுடன் 6 படங்களுடனும் உடனடியாகவரவும். துரைசிங்கம், 376B, நாவலர் வீதி, அரியாலை. சி-0957


## அமெரிக்க

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

காபூல் அரசு மனப்பூர்வமான விதத்தில் ஆர்வம் கொண்டுள்ளது இப்போது ஊர்ஜிதமாகிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (சி)



வவனியாமாவட்ட விடுதலைப் புலிகள் இயக்க உபதளபதி லெப். கண்ணனின் பூதவுடலை முதலாவது படத்திலும், அவரது பூதவுடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# யாழ். மாவட்ட உடனடி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம்முழுத் தொகையையும் வழங்க புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் திரு. ஒஸ்டின் பெர்ணாண்டோ சம்மதித்தார்.

இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு, வயல்களுக் ஒரு ஏக்கருக்கு 1,500 ரூபாவும், அரை ஏக்கருக்கு 750 ரூபாவும், மற்றும் உபஉணவுப் பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 1000 ரூபாவும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

உலக வங்கிக் குழுவினரை யாழ். அரசாங்க அதிபர் வரவேற்றார். இதைத் தொடர்ந்து யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றியும், புனருத்தாரண செலவுகள் பற்றியும் எடுத்துரைத்தபோது தெரிவித்ததாவது:-

,'1983ம் ஆண்டுமுதல் 1988ம் ஆண்டுவரை யாழ் மாவட்டம் முழுவதும் ஏற்பட்ட இழப்புகளினால் மொத்தம் 880 கோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது தனிப்பட்ட பொதுமக்களுக்கு 750 கோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது. அரசாங்க இலாகாக்கள், கூட்டுத்தாபனங்களுக்கு 130 கோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது. அரச இலாகாக்களிப் தொலை தொடர்பு நிலையத்திற்கே கூடிய சேதமேற்பட்டுள்ளது.

24,891 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 6,371 ஆகும். புலோலி, அம்பன், கீரிமலை, புத்தூர், கைதடிப் பகுதிகளில் இப்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. உடன் நிவாரணமாக 5 லட்சம் ரூபா செலவில் 5.000 மண்வெட்டிகளும் மற்றும், தெளிகருவிகள், வாட்டர் பம்புகளும் வழங்கவேண்டும்.

இவ்விடயம் ஆலோசனைக்கு எடுப்பதாகப் புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் தெரிவித்தார்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாக 50 ரூபா வீதம் 2.000 பேருக்கு விதைநெல் வழங்க பத்து லட்சம் ரூபாவும் 500 ரூபா வீதம் 2000 பேருக்கு பசளை வழங்க 10 லட்சம் ரூபாவும், வழங்கவேண்டுமென தெரிவிக்கப்பட்டபோது இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு ஒரு ஏக்கருக்கு 1500 ரூபாவும், மற்றும் உபஉணவுப் பயிர்களுக்கு ஒரு ஏக்கருககு 1000 ரூபாவும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி உட்பட 83 பாடசாலைகள் பாதிக்கப்பட்டதாகவும் இதனை புனர்நிர்மாணிக்க 1 கோடி 70 லட்சம் ரூபா தேவை என்றும் வசாவிளான் அமெரிக்க மிஷன், நெல்லியடி மத்தி ஹாட்லி, தெல்லிப்பழை யூனியன் ... பதுளை போன்ற முழுவதும் பாதிக்கப்பட்ட 9 பாடசாலைகளுக்கு 4 கோடி 50 லட்சம் தேவை என்றும் தெரிவிக்கப்பட்டது

உடனடியாக தடபாடங்களுக்கு 130 லட்சமும், சாதனங்களுக்கு 70 லட்சமும் தேவை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 3 வருடகாலத்தில் 18,000 கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனரென்றும் 100 கோடிரூபா வருமானத்தை கடற்றொழிலாளர்கள் இழந்துள்ளனரென்றும் தெரிவிக்கப்பட்டது

கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு 402 மில்லியன் ரூபாவை கொடுத்தால் ஒருவருடகாலத்தில் 500 மில்லியனாக உற்பத்தி அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது 3 வருடம் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு முன்னர் எடுத்த கடன்களை நீக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டபோது இவற்றை ஆலோசனைக்கு எடுப்பதாக புனர்நிர்மாண அமைச்சு செயலாளர் தெரிவித்தார்.

பஸ் வான்கள் செல்லும் பிரதான வீதிகளின் திருத்தவேலைக்கு 164 மில்லியன் தேவை எனத் தெரிவித்தபோது உடனடியாக வடமராட்சியில் உடைந்த மதவுகளை திருத்த 13,7500 ரூபா வழங்க ஒப்புக்கொண்டார்.

யாழ் மாவட்டத்தில் 24 757 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளதென்றும் மிக வறிய குடும்பங்களுக்கு நிவாரணமளிக்க வேறுதிட்டமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக 5000 ரூபா வீதம் 2000 தற்காலிக கொட்டில் வீடுகளுக்கு பணம் வழங்க செயலாளர் சம்மதித்தார் இந்த வீடுகள் பின்னர் நிரந்தரமாக அமைக்க 25 000/ வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது

இம் மாநாட்டில் வட பி. போ சபைத் தலைவர் திரு. எஸ் கனகரத்தினம் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சீ வீ கே சிவஞானம், வைத்திய அத்தியட்சகர் திரு. நச்சினார்க்கினியர், பனை அபிவிருத்திச் சபை தலைவர் திரு எஸ் நடராசா, தேசிய கூட்டுறவு சபை யாழ் கிளை தலைவா திரு எஸ் சிவமகாராசா, மற்றும் பொது ஸ்தாபன பிரதிநிதிகள் உதவி அரசாங்க அதிபர்கள், செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். [க]

## புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகளின் கொடியை ஏற்றி அவர்களின் காரியாலயத்தை அண்மையில் திறந்து வைத்த வண கொனுள்ளே சோமரதான தேரோ என்பவரே இப்பிக்கு ஆவார்.

அவர் மேலும தெரிவித்ததாவது:

"கல்முனையில் தமது காரியாலயத்தைத் திறக்கும் வைபவத்தில் கலந்துகொள்ளும்படி புலிகள் எனக்கு அழைப்பு விடுத்தனர். வன்முறைகளை அவர்கள் கைவிட்டதன் காரணமாகவே அவர்களின் அழைப்பை ஏற்றேன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கல்முனைப் பகுதியில் சிறுபான்மைப் பிரிவினராக உள்ள சிங்கள மக்களின் உரிமைகளைமதிப்பார்களானால் அவர்களுக்கு வாக்களித்து ஆதரவு கொடுக்கவும் நாம தயாராகவுள்ளோம்'' என்று அவர் தெரிவித்தார்.

கல்முனையிலுள்ள பௌத்த விகாரையின் விகாராதிபதியாக இவர் இருந்துவருகிறார்.

## மடுவீதியில் 2 சடலங்கள்

(வவனியா)

கடந்த சனிக்கிழமை காலை மன்னார் மாவட்டத்தல் மடு வீதியில் இரு இளைஞர்களின் சடலங்கள துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்படுவதாக முருங்கன் பொலிஸார் வவனியா பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளனர்.




## தேவை

எமது வாசனைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு நல்லொழுக்கமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. தொழிற்சாலைக்கு சமீபமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் சான்றிதழ்களுடன் காலை 8-30 மணிக்குமுன் நேர்முகப்பரீட்சைக்கு வரவும்.

**எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி**

34, ஆடியபாதம் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

எ-2178


## கோப்பாய் நாவலர் பாடசாலை அபி. சங்கம்

[கோப்பாய்]

கோப்பாய் நாவலர் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையின்கீழ் நிகழும். பெற்றோர் பாதுகாவலர், நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

செயலாளர், பொருளாளர் அறிக்கைகளைத் தொடர்ந்து புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெறும்.


## Jaffna College, English Medium Classes

The English medium classes preparing students for the London Advanced Level and the Associated Examining Board (A E B) of Hampshire for the Ordinary Level and Advanced Level Examinations are being offered.

Parents and students interested should meet me immediately.

A. KADIRGAMAR,
Principal.

Jaffna College,
Vaddukoddai.

(A-2186)



## மருந்துக்கடை
## சுந்தரம் பிரதர்ஸ்

சித்த ஆயுர்வேத மருந்துகள் மருந்துச் சரக்குகள்
கோவில் அபிசேகத் திரவியங்கள்
விற்பனையாளர்
**மீண்டும் பஸ்நிலையத்துக்கு அண்மையில்**
யாழ்ப்பாணம்,
175, மின்சாரநிலைய வீதியில்.

ஏ-2160


## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை
## கேள்வி விளம்பரம்

1987ஆம் ஆண்டு செப்ரம்பர் மாசம் 28ஆம் திகதி காலை 10 மணிவரை யாழ். அபிவிருத்திச்சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம் வேலைப்பகுதி) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க்காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்

கேள்விக்காரர் வைப்புப்பணத்தையும், கிரயப்பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன்பேரில் 1987ஆம் ஆண்டு செப்ரம்பர் மாசம் 21ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

| யாழ். அபிவித்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்ட தொகை தகைமை | வைப்பு பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|
| 1. மானிப்பாய் பட்டணம் | மத்திய சந்தை (இரண்டாம் கட்டம்) | ரூ.250.000/- | ரூ.250/- | ரூ.100/- |
| 2. உரும்பராய்-ஊரெழு | உப அலுவலகக் கட்டடம் | ரூ.250,000/- | ரூ.250/- | ரூ.100/- |
| 3. கோப்பாய் | உப அலுவலகக் கட்டடம் | ரூ.250,000/- | ரூ.250/- | ரூ.100/- |
| 4. காரைநகர் தெற்கு | களபூமி விளானைபொது நூலகக்கட்டடம் | ரூ.150,000/- | ரூ.125/- | ரூ. 75-/ |
| 5. அனலைதீவு | பொது நூலகக்கட்டடம் | ரூ.125.000/- | ரூ 100/- | ரூ. 50/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச்செயலாளர் (நிர், சட், வேலை)
யாழ். அபிவிருத்திச்சபை,

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம். [ஏ 21!3]


### ஆரம்பமாகின்றன!
## செப். 9-ல்
## 88 DAY CLASS

(எமது வழமையான ஆசிரியர்களினால்)

**திங்கள் — வெள்ளி (7-00-11-30)**

விபரங்கட்கு:

**நிரு டியூசன் சென்ரர்,**
கோண்டாவில்.

[எ 2183]


## அறிவித்தல்
### வட இலங்கைச் சங்கீத சபை
## அறிமுறைப்பரீட்சை 1987

சூழ்நிலை காரணமாக 1987 ஜுலை மாதம் 18-ம் 19ம் திகதிகளில் நடைபெற்ற அறிமுறைப் பரீட்சைக்கு தோறறத்தவறிய பரீட்சார்த்திகளுக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் வழங்க சபை தீர்மானித்துள்ளது. அப் பரீட்சை 1987 ஒக்ரோபர் மாதம் 17-ம் (சனி) 18-ம் [ஞாயிறு] திகதிகளில் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பட்டினங்களில் மாத்திரம் நடைபெறும் என்பதை அறியத் தருகிறேன்.

**யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளரும்,**
**வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.**

எனது எண்: ஈ. ஏ.
வ இ. ச. சபை,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(ஏ-2180)


## ● உங்கள் நீரில் கல்சியமா? (calcium)
## ● உங்கள் நீரில் மாசுப்பொருள்களா? (Impurities) அவற்றை அகற்றி விடுங்கள்

- உங்கள் கைத்தொழில் இயந்திரங்கள், பாகங்கள், கொதிகலன்கள் (Boilers) ஆய்வு கூட உபகரணங்கள் (Laboratory Equipment) மற்றும் ஏனைய உபகரணங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் . . . . . .
- உங்கள் உற்பத்திப் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் . . . . . .
- உங்கள் சகல உபயோகங்களுக்குமான தூய, மென் நீரை வழங்கவும் . . . . . . .
- உங்களால் உபயோகப்படுத்தப்படும் நீரின் தன்மையை ஆராயவும் தேவையான சிபார்சுகளை வழங்கவும் . . . . .

உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

## DYNAMIC ENGINEERING LTD.
476, Main Street, JAFFNA.

எமது ஸ்தாபனம்:-

**Environmental Laboratories Ltd.**
5, Kotalawela Drive, Colombo - 4. (எ 2187)



## ஆர். வி. ஜி.
## பீடி ஸ்தாபனம்
## வியாபார இடமாற்றம்

07-09-1987 திங்கட்கிழமை முதல்
எமது ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்
எமது முன்னைய வியாபார ஸ்தானமாகிய
**275, பீச் ரோட், யாழ்ப்பாணம்**
விலாசத்திற்கு இடமாற்றம் செய்துள்ளோம் என்பதை
ஆர். வி. ஜி பீடி
விநியோகஸ்தர், விற்பனையாளர்,
வாடிக்கையாளர், பாவனையாளர்,
ஆதரவாளர்
அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

நிர்வாகம்:
**ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்,**
275, பீச் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 22064
தந்தி: ஆர்விஜி.

(சி-0936)


## ஆரம்ப விழா

யாழ்ப்பாணம் திங்கள்.

வடகோவை அருள்மிகு சாந்தி துர்க்கா தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை கண்டாமணி ஒலித்தல் ஆரம்ப விழா நடைபெறும். இவ்விழா ஸ்ரீவத்ஸ சோமதேவ சர்மா தலைமையில் நடைபெறும்.

திரு சி. கா. திருச்செல்வம், வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திரன், வைத்திய கலாநிதி பொ. நவரட்ண ராஜா, திரு சி. வெ. சுப்பிரமணியம், திரு. அ. சுப்பிரமணியம், திரு. கா. குமாசாமி ஆகியோர் இவ்விழாவில் கலந்து சிறப்புரையாற்றுவர்.

## 5—வது ஆண்டு நினைவஞ்சலி



### பொன்னையா தயாபரன்

(பிரதம நிர்மாணப் பொறியியலாளர், கட்டிடத் திணைக்களம்-கொழும்பு.)

தோற்றம்: 16-08-1936
மறைவு: 07-09-1982

நெறிதரு வாழ்வு வாழ்ந்தாய், நேசமே என்பால் வைத்தாய், பொறியியலாளராகிப் புவியெலாம் போற்ற வாழ்ந்தாய் சிறு பொழுதேனும் எம்மைச் செகத்திடைப் பிரியா நீயோ, உறுதுயர்க் கடலுள் எவ்விதம் பிரிந்தாய் ஐயா!

மனைவி, பிள்ளைகள்.
"பரன்",
166, 1ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி 0950)

# இன்றைய பலன்

மாதம்– ஆவணி
திகதி- 22 (1987-09-07)
கிழமை- திங்கள்
திதி- பூரணை
நக்ஷத்திரம்- சதயம் மு. இ. வரை

மேடம்: ஆசாரக் குறைவான சம்பவங்கள் இடம் பெறும், உடல் நலத்தில் கவனம் செலுத்தவும், குடும்பத்திலும் சிறு பூசல்களுக்கும் இடமுண்டு, இன்று கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்க்கவும்.

இடபம்: அன்னையின் அன்பு தாராளமாகக்கிடைக்கும் செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும், கும்பத்தில் முன்னேற்றத்துக்கும் இடமுண்டு, கல்விப் பணிச்சிறப்பும் உண்டு.

மிதுனம்: பெரிய இடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம், சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும், புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும்.

கடகம்: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம், வீட்டில் சிறுபிணி தலைதூக்கும். சிறிய விடயத்துக்குக்கூட பெரியகோபம் தோன்றும்

சிங்கம்: சுவையான சம்பவங்கள் மகிழ்ச்சிதரும், எதையும் ஒழுங்குமுறையில் செய்வதால் திருப்தியடைவீர்கள், பெற்றோரின் பூரணகட்டுப்பாட்டில் நடப்பீர்கள்

கன்னி: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும், செல்வாக்குப் பாதிக்கப்படலாம், அயலவர்களுடன் அன்புடன் நடந்துகொள்ளவும்.

துலாம்: இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்கள் ஆதரவும் இன்று தப்பாமல் கிட்டும், இறைபக்தி மேலோங்கும், பிதாவழித் தனமும் சேரும்.

விருச்சிகம்: செய்தொழில் மூலம் சிறப்புண்டு, பெரியவர்கள் ஆசிஅவசியம் உண்டு, போட்டாப்போட்டிகளின் பின்வெற்றி உங்கள் பக்கம் இருக்கும்.

தனுசு; அதிர்ஷ்டலாபங்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. புதுத்தொழிலின் முதலீடு திருப்திதரும், புத்திர சுகமும் உண்டு.

மகரம்: முயற்சியில் முட்டுக்கட்டை தோன்றும். மற்றவர்களிடம் குறைகேட்க நேரிடும், நண்பர்களின் தொல்லை எரிச்சலைத்தரும், சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கும்பம்: எதிலும் தயக்க நிலை தென்படும் நண்பர்களும் குறைகூற நேரிடும், பொளாதாரத்துறை மந்தமடையும், வாய்வுப் பதார்த்தங்களைத்

( 8ம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்பலத்தின் மரண சாதனமில்லாச்சொத்துவிடயத்தில்.

வேலுப்பிள்ளை பொன்னம்பலம் கைம்பெண் சந்திரா தேவி, கரவெட்டிமேற்கு.
—மனுதார்

மரணச்சொத்து
இல. 1263 / T

எதிர்

வேலுப்பிள்ளை பொன்னம்பலம மகள் ஜெயந்தி, கரவெட்டி மேற்கு.
—எதிர்வாதி.

மேற்குறித்த இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே குறிப்பிட்ட காலஞ்சென்றபொன்னம்பலத்தின் மரணச் சொத்துக்குப் பரிபாலனச்சான்றிதழ் வழங்குவதற்காக மேற்குறித்த நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ளவர் எவராவது 1987ம் ஆண்டு புரட்டாதி மீ 25ஆம் திகதி காலை 9-30 மணிக்கு இந்த நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டவும்.

1987ம் ஆண்டு ஆவணி மீ 19ஆம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி,

**சண்முகம் நடராசா,**
பதிவாளர்.

வரைந்தவர்:
சி செல்லையா,
மனுதாரின் சட்டத்தரணி.

(சி 0892)

## இப்படியும் நடக்கிறது

'லலித' நாயகனுக்கு நடந்த 'ஒப்பரேஷன்' பற்றியும், அந்தப் பெரிய 'ஒப்பரேஷனை' நடத்திய 'தம்பிப்பிள்ளை குறித்தும் கடந்த வாரம் எழுதியிருந்தேன் அல்லவா?

இந்த விபரத்தை 'மோப்பம்' பிடித்துக் கண்டறிந்து மெய்சிலிர்த்துப் போன கொழும்பு வாசகர் ஒருவர் எனக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் ஒரு பகுதி.

"...... நீங்கள் குறிப்பிட்ட 'த'பற்றிக் கண்டறிந்தேன். அந்தக் குறிப்பிட்ட ஆஸ்பத்திரியில் 'அவர்' தான் பெரிய 'கொன்சல்ரன்ட்'.

"இவர் 1959-ம் ஆண்டு முன்னாள் பிரதமர் திரு. எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்கா சுடப்பட்ட போது அவருக்கு 'ஒப்பரேஷன்' செய்த நிபுணர் குழுவில் ஒருவர்..."

உண்மையில் 'அவர்' யோகமானவர்தான்!

—ஊடுருவி

### ரயில்நிலையத்தில் மீண்டும் அகதிகள்

[பலாலி]

தெல்லிப்பழை புகையிரத நிலையக் கட்டிடத்தில் மீண்டும் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த கும்பங்களே அதிகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

### CHANGE OF NAME

I. Thanigasalam Sacktivale of 'Thiruththanikai' Avarangal, Puttur do hereby inform the general public that I have changed my name 'Thanigasalam Sakthivel' to Thanigasalam Sacktivale with effect from 07-01-1987. [C-0952]


## Architects Engineers

Wanted Qualified Architects, and Structural Engineers to join our team in the capacity of Directors to work in the Nothern and Eastern provinces.

Apply with bio-data before 30-9-87.

THURAIRAJAH ASSOCIATES (PVT) LTD,
31, McLeod Road, Colombo-4.

[C-0947]

LOW COST HOUSES FOR
RE-SETTLEMENT PROJECTS
Designed Economically and Conveniently
Costing: Rs. 25,000 to Rs. 40,000
Bed Room, Kitchen, Verandah, and Toilet.
Area: 300 - 400 sqare feet
STAR BUILDERS,
40, Chapel Street, Jaffna.

(C-0951)

மங்களகரமான திறப்பு விழா

# PUSPA & COMPANY புஷ்ப்பா & கொம்பனி

இடம்: 128, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம்.

காலம்: (இன்று) 7-9-1987—திங்கட்கிழமை. சுபவேளை: காலை 11 மணி யிலிருந்து 12 மணி வரை.

மேற்படி கிளை ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்தவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
★ இவ்விழாவிற்கு அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விவசாயிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் ஓர் நற்செய்தி!
உங்களுக்குத் தேவையான

## தரமான லங்கெம் தயாரிப்புக்களை

பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:

## புஷ்ப்பா & கொம்பனி, 128, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம்.

இடமாற்றம்: எமது மற்றுமோர் கிளை ஸ்தாபனமாகிய NEW PHARMED DISTRIBUTOR SERVICES உங்கள் வசதிகருதி 128 B, மானிப்பாய் றேட் எனும் விலாசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

பின்வரும் ஸ்தாபனங்களின் பொருள்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
★ HEMAS DRUGS LTD ★ WARNER LAMBERT LANKA (PVT) LTD ★ BYK GULDEN
★ MACKWOODS LTD ★ PETTAH PHARMACY LTD

(ஏ-2197)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த உலகவங்கிக் குழுவினர் யாழ். செயலகத்தில் நேற்று மகாநாடுஒன்றை நடத்தினர். இம்மகாநாட்டில் கலந்துகொண்ட யாழ் மாவட்டத்தின் பல்வேறு துறைகளின் பிரமுகர்களையும் படத்தில் காணலாம் படம்: 'தேவா'

# "இலங்கை - இந்திய ஒப்பந்தம் மீதான எதிர்ப்பு குறைவடைந்து வருகிறது!"

(புதுடில்லி)

"இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். எனினும், இந்த ஒப்பந்தத்தை சில தீவிரவாத சக்திகளும், கொள்கை வெறியர்களும் எதிர்க்கிறார்கள் ஆனால் அந்த எதிர்ப்பும் தற்போது குறைந்துள்ளது"

இவ்வாறு இலங்கை நிதியமைச்சர் திரு ரோனி டிமெல் புதுடில்லி விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசும்போது கூறினார்.

இந்திய - இலங்கை கூட்டுப் பொருளாதாரக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நேற்று புதுடில்லி வந்த இலங்கை நிதியமைச்சர் திரு ரோனி டி மெல்லை இந்திய நிதியமைச்சர் திரு என்.டி. திவாரி விமான நிலையத்தில் வரவேற்றார்.

இந்திய - இலங்கை கூட்டுப் பொருளாதாரக் கூட்டம் இன்று புதுடில்லியில் ஆரம்பமாகின்றது.

இலங்கை நிதியமைச்சர் திரு ரோனி டிமெல் பத்திரிகையாளர் மத்தியில் தொடர்ந்து பேசியதாவது:-

"இலங்கை - இந்திய நட்புறவை வலுப்படுத்தி அரசியல் நட்புறவை மேலும் வலுபடுத்த கூட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு அவசியமாகும்".

இரண்டு நாள் நடைபெறவிருக்கும் கூட்டுப் பொருளாதாரக் கமிட்டிக் கூட்டத்தில் இரு தரப்பினரதும் வர்த்தக விஸ்தரிப்புப்பற்றியும் கூட்டு முதலீட்டை விரிவாக்கும் வாய்ப்புக்கள்பற்றியும், விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்புப்பற்றியும், எண்ணெய்வள ஆய்வு பற்றியும் ஆராயப்படவிருக்கிறது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை ஊர்ஜிதம்செய்வதற்கு இலங்கைப் பாராளுமன்றம் ஏகமனதாகத் தீர்மானமொன்றை எடுக்கும் என்றும் நம்பிக்கை தெவித்த திரு ரோனிடிமெல் ஒப்பந்தப் பிரகாரம் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்தமை தமக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார் (வா)

## புதுடில்லியில் ரோனி

## தடுப்புமுகாம்களிலிருந்து 3,745 தமிழ் இளைஞர் விடுதலை

(கொழும்பு)

தென்பகுதி தடுப்பு முகாம்களிலிருந்து இதுவரை 3 745 தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சுமார் 1000 இளைஞர்கள் விடுவிக்கப்பட்டு கப்பல்கள் வடக்கு-கிழக்கு நோக்கிமூலல் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இன்று திங்கட்கிழமை மட்டுநகரைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டு சப்பல் மூலம் புதன்கிழமை அங்கு சென்றடையவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சி)

## ஒப்பந்தத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற காங்கிரஸ்[ஐ] கமிட்டிக் கூட்டத்திலேயே திரு. பண்டாரி இவ்வாறுகூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது: இலங்கைஇந்திய ஒப்பந்தத்தின்படி, சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகியமொழிகளும் ஆட்சிமொழிகளாக இருக்கும். தமிழ் மக்களுக்குத் தக்க மரியாதை கொடுக்காமையினால் அவர்கள் தங்களை மாற்றாந்தாய்மக்களாகக் கருதினார்கள்.

"இலங்கைஇந்திய ஒப்பந்தப்படி இலங்கையில் இந்திய அமைதிப்படைஇருப்பதுபோல் முன்னரும் இந்திய அமைதிப் படையினர் பலநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இந்த ஒப்பந்தம் ஓர்புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது" என்றார். [வா]

## இன்றைய பலன்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்க்கவும்.

மீனம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும், இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள். குடும்பத்தில் சுமூகமான சம்பவம் இடம் பெறும்.

ஜோ. இரவீந்திரன்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036 81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu Telephone: — 22389, 24126.

## வவனியா புலிகள்

(ம் பக்கத் தொடர்ச்சி)

தைச்சேர்ந்த கண்ணன்.தனம், கைலை ஆகிய மூவரது மரணங்களும் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

வவனியாமாவட்ட நீதவான் திரு ஆர். வி. வில்வராஜா இம்மூவரதும் மரணவிசாரணை மேற்கொண்டார். வவனயா மாவட்ட வைத்திய அதிகாரி சிறிராஜேஸ்வரன் பிரேத பரிசோதனையை நடத்தினார்.

கண்ணனின் மைத்துனர் கிருபாமூர்த்தி, தனத்தின் நண்பன் யசோதரன், கைலையின் மைத்துனர் இரவீந்திரராஜா ஆகியோர் மரணவிசாரணையின்போது சாட்சியமளித்தனர்.

துப்பாக்கிச்சூட்டுக் காயத்தினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கு, அதிர்ச்சி என்பவற்றினாலேயே மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இறுதிஊர்வலம்

வவனியா பிராந்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ உபதளபதி கண்ணனின் இறுதிக்கிரியை இன்று வேப்பங்குளம் இந்துமயான தில் நடைபெற்றது

நேற்று பிற்பகல் அவரது தருமன்காடு இல்லத்திலிருந்து சடலம் சகல மரியாதைகளுடனும் சடலம்எடுத்துச் செல்லப்பட்டது

வன்னிநகரே முழு சோகத்தில் மூழ்கியிருந்தது. வவனியா நகரில் கருப்பு கொடிகளும் வீதியேங்கும் வாழைமரம், தோரணங்களும் காணப்பட்டன.

சனி, ஞாயிறு வவனியாவில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## மோட்டார் சைக்கிளில் பயணம்செய்தவர் பலி!

யாழ்ப்பாணம், திங்கள்

"மோட்டார் சைக்கிளும் மினிபஸ்ஸும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் பலியானார். ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சந்திரபாலா விஜயபாலா என்ற 26 வயது இளைஞரே பலியானவராவார்.

மனோகரன் என்பவர் படுகாயமடைந்தார்.

இருவரும் கல்லுண்டாய் வெளியில் சென்றுகொண்டிருந்தபோது அதே திசையில் சென்ற மினிபஸ் விலத்தும் போது இவர்களை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையை டாக்டர் செல்வி சசி சபாரத்தினம் மேற்கொண்டார். [கு]

## நிர்வாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ள இடைக் கால நிர்வாகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் பங்கு கொள்கின்றார்கள் என்று உலகத்தை ஏமாற்றுவதற்காகவும், தமிழ் மக்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து அந்நியப்படுத்துவதற்குமே இந்த நிர்வாகசபை என்று கூறிய திரு திலகர், இது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கான ஒரு தந்திரோபாயமே என்றும் கூறினார்.

இடைக்கால நிர்வாகத்துக்கான ஆந்த ஆலோசனைச் சபையின் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுத்தும் நோக்கம் இல்லையென்பது தெளிவாகின்றது என்றும் கூறியதிலகர், தேர்தலின்பிறகு மாகாணசபைகளுக்கு கொடுக்கப்படவுள்ள அதிகாரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் கூறினார்.

## 16 ஆயிரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

[சென்னை]

இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இதுவரை 16 ஆயிரத்துக்கு மேலான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் இலங்கை இராணுவம் இந்திய அமைதிப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். (வா)

## பாராளுமன்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டவர்களில் ஒருவர்தெரிவித்த தகவல் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாகவும் இதன் அடிப்படையில் குற்றவாளிகள் கைதாகலாமென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பாராளுமன்ற குண்டுவெடிப்பு சம்பந்தமாக தேடப்பட்டுவரும் அஜித்குமார் எங்கிருக்கிறாரென்று தெரிய வந்துள்ளதாகவும், இவர் விரைவில்கைதுசெய்யப்பட்டுவிடுவாரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

## இந்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தடுத்து நிறுத்துதல், தமிழர் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவத்தினரை வெளியேற்றுதல ஆகிய காரணங்களுக்காகவும் சமூக விரோத கும்பல்களை அனுமதிக்கும் இந்திய அமைதிப் படையினரின் செயற்பாடுகளை சண்டிப்பதுடன் அதனை முற்றாக எதிர்க்கவும் சமூக விரோத சக்திகளாகிய ரெலோ, புளொட், ஈ பி ஆர் எல் எவ் ஆகியவற்றின் ஆயுதங்களை பறிமுதல் செய்வதுடன் சிறிலங்கா பொலிஸ் நிருவாகத்தை தடுத்துநிறுத்தும் நோக்குடனேயே இந்த மறியல் போராட்டம் நடத்தப்படுவதாக தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு இ. திலீபன் நேற்றைய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

திரு. திலீபன் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எமது அடிப்படை உரிமைகள் பறிக்கபட்டு தொடர்ச்சியாக ஏமாற்றப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனை நாம் அங்கீகரிப்போமானால் எதிர்கால எமது சந்ததிக்கு செய்தது ரோகமேயாகும்.

"சமூகவிரோத கும்பலின் அட்டூழியங்களும் அடாவடித்தனங்களும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதுடன் தினசரி கொள்ளைகளும், படுகொலைகளும் அதிகரித்த வண்ணம் உள்ளது. இறுதியாக குருநகரில் மக்களுக்கு எதிராக கிரனெட், துப்பாக்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன மக்களை பாதுகாக்க எம்மால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு குழுவினர் கடத்தப்பட்டும் தாக்கப்பட்டுமுள்ளனர்.

"இந்த சமூக விரோத கும்பலுக்கு இந்திய சமாதானப் படையினர் பாதுகாப்பு அளித்துள்ளதுடன், எமது போராளிகள் கடத்தலைக் கண்டும் எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. கோப்பாயில் எமது இயக்கத்தவர்கள் இந்தியப் படையினரின் முன்னாலாயே தாக்கப்பட்டுள்ளனர். இந்த செயல்களுக்கூடாக சமூகவிரோதக் கும்பலுக்கு இந்தியப்படை துணைபோவதாகவே நம்பவேண்டியுள்ளது.

எமது ஆயுதங்கள் வாங்கப்பட்டபின்னர் சிறிலங்கா அரசு மிகக்கொடூரமான முறையில் இனஅடக்கு முறையை மேற்கொண்டுவருகின்றது. இந்த நிலைமையில் எமது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க போராடுவதைத்தவிற எமக்கு வேறுவழியில்லை. இப்படியான ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் முதியோர் முதல் பச்சிளம் பாலகர் வரை இந்தமறியல் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

மினிபஸ் மற்றும் வாகனங்கள் யாவும் தமதுவழமையான சேவையை நிறுத்தி போராட்டத்திற்கு ஆதரவுதரவும்.